DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 1/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மணிரத்தினம் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.சந்தனம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 11.11.2025

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தொண்டியில் வசித்து வருகிறேன். எலெக்ட்ரிசியன் வேலை பார்த்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு நான் தொண்டியில் வேலைக்கு பொருள் வாங்குவதற்கு எலெக்ட்ரிக்கல்ஸ் கடைக்கு வந்திருந்தேன். அந்த கடை தொண்டியில் உள்ள கனரா வங்கிக்கு அருகில் உள்ளது. அப்போது மதியம் 12.00 மணி இருக்கும். நகை பறிகொடுத்த நபர் வங்கிக்குள் சென்று வெளியே நின்று கொண்டிருந்தார். அவரிடமிருந்து ஏதேயோ பறித்து கொண்டு

ஒரு நபர் ஓடினார் எல்லோரும் துரத்தி கொண்டு சென்றார்கள். நானும் சிறிது துாரம் ஓடினேன்.

2.நகையை பறிகொடுத்த நபர் தான்வைத்திருந்த தங்க நகையை பறித்து கொண்டு சென்றதாக கூறினார். நகையை பறித்து கொண்டுசென்ற நபரை இப்போது பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலாது .போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அவ்வாறு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. கடந்த 18.07.2018 தேதி காலை சுமார் 11.15 மணியளவில் நானும் மாணிக்கம் என்பவரும் தொண்டி கனரா வங்கி எதிரே உள்ள காமாட்சியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது எனக்கு முன்பே தெரிந்த சண்முகம் என்பவர் வங்கியிலிருந்து மஞ்சபை யுடன் வெளியே வந்து TVS XL இருசக்கரவாகனத்தில் அதை மாட்டிவிட்டுநின்று கொண்டிருந்தார் அதை நான்நேரில பார்த்தேன் என்றால் சரியல்ல.

2.அப்போது அடையாளம் காட்டகூடிய இரண்டு நபர்கள் மேறப்டி சண்முகம் என்பவரின் வண்டியில்மாட்டப்பட்டிருந்து மஞ்சப்பையை எடுத்து கொண்டு ஒருவன் ஓடமற்றொருவன் பின்னால் இருசக்கரவாகனத்தை வந்து அதில் அந்த இருநபர்களும்சென்றுவிட்டதை நான் நேரில் பார்த்தேன் என்று போலிசார்என்னை விசாரிக்கும் போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை அடையாளம் காட்ட இயலாது என எதிரிகளுக்கு ஆதரவாக மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by me/before me in open court,interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.